

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற ”அன்புக்கரங்கள் திட்ட தொடக்க விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில், ”அன்புக்கரங்கள் திட்டத்தை தொடங்கி வைத்து, அன்புக்கரங்கள் மற்றும் தாயுமானவர் திட்ட பயனாளிகளுக்கு மடிக்கணினிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அரசு செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் சதித்திட்டங்களை முறியடிக்கும் வகையில்

# முதல்வரின் ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டம் மிகப்பெரிய வெற்றியை அடைந்துள்ளது!

### சைதாப்பேட்டையில் – செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.16–

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் 14–9–2025 அன்று ‘ஓரணியில் தமிழ்நாடு’ மற்றும் ‘முப்பெரும் விழா’ தொடர்பாக சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.



அப்போது செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

தமிழ்நாடு பல்வேறு வகைகளில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, தமிழர் பண்பாட்டை பறைச்சாற்றும் கீழடி புறக்கணிப்பு, இந்தி திணிப்பு, தமிழ்நாட்டிற்கான நிதி மறுப்பு, நீட் போன்ற நியாயமற்றத் தேர்வுகள், கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்து, அரசியல் தலைவீடுகளை குறைக்கும் வகையிலான தொகுதி மறுவரையறை போன்ற சதித்திட்டங்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் மக்கள் நலனுக்கு எதிராக ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் இதை தமிழக மக்களுக்கு எடுத்துரைக்கும் விதமாக, தமிழக மக்களிடையே இது போன்ற போக்குகளைப் படம்பிடித்து, காட்டும் வண்ணம் ஓரணியில் தமிழ்நாடு எனும் ஓர் புதியத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் – திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் –மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஜுலை 1ஆம் தேதி பத்திரிக்கையாளர்கள் சந்திப்பிலும், 2ஆம் தேதி விளக்கக்கூட்டம் என்கிற வகையிலும், 3ஆம் தேதி நேரடியாக முதலமைச்சரே அவர் வசிக்கும் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தைத் தொடங்கியும் வைத்தார்கள்.

அந்த வகையில் தமிழ்நாட்டில் கடந்த 70 நாட்கள், தி.மு.கழகத்தின் நிர்வாகிகள், தமிழ்நாட்டில் உள்ள 68 ஆயிரம் வாக்குச்சாவடிகளிலும், ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணையவேண்டிய அவசியம் குறித்தும், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட ஒன்றிய அரசின் பாரபட்சமான நடவடிக்கைகள் குறித்தும், அதை எதிர்கொள்ளும் தமிழ்நாட்டின் முதலமைச்சரின் நிலைக்குறித்தும் எடுத்துச்சொல்லப்பட்டது.

**ஒரு கோடி குடும்பங்கள் இணைந்தன!**

அதை எடுத்துச்சொல்லப்பட்டு, தி.மு.கழகத்தில் இணைவதற்கு வாய்ப்பும் வழங்கப்பட்டது. அந்த வகையில் தி.மு.கழகத்தில் தமிழக அரசியல் வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத அளவிற்கு ஒரு கோடி குடும்பங்கள் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள்.

ஒரு கோடி குடும்பங்கள் என்று ஒரு மிகப்பெரிய அளவிலான இலக்கு. அந்த ஒரு கோடி குடும்பங்கள், தமிழ்நாட்டில் இருக்கிற வருவாய் மாவட்டங்கள் 38ம், தமிழ்நாட்டில் இருக்கிற 234 சட்டமன்றத் தொகுதிகளிலும், அந்த வகையில் சென்னை தெற்கைப் பொறுத்தவரை ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள் என்றால், மதுரவாயல் தொகுதியில் 75,206 குடும்பங்களும், விருகம்பாக்கம் தொகுதியில் 46,546 குடும்பங்களும், சைதைத் தொகுதியில் 47,013 குடும்பங்களும், வேளச்சேரியில் 47,298 குடும்பங்களும், சோழிங்கநல்லூர் தொகுதியில் 1,14,366 குடும்பங்களும் ஆக மொத்தம் தமிழ்நாடு முழுவதும் 1கோடி குடும்பங்கள் என்றாலும், சென்னை தெற்கில் 3,32,539 குடும்பங்கள் ஓரணியில் தமிழ்நாடுத் திட்டத்தில் இணைந்திருக்கிறார்கள்.

இந்தக் குடும்பங்கள் வாயிலாக, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் தி.மு.கழகத்தில் இணைந்திருப்போர் எண்ணிக்கியைப் பொறுத்தவரை தலைமைக் கழகத்தின் சார்பில் சைதைப்பேட்டைக்கு இலக்கு என நிர்ணயிக்கப்பட்டது 1,09,449. ஆனால் செயல்படுத்தியது 1,34,106. மதுரவாயலுக்கு இலக்கு என நிர்ணயிக்கப்பட்டது 1,76,667 – இணைக்கப்பட்டது 2,25,004. விருகம்பாக்கம் தொகுதிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது 1,14,953 – இணைக்கப்பட்டது 1,32,022. சோழிங்கநல்லூர் தொகுதிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது – 2,76,352 – இணைக்கப்பட்டது 2,99,845, வேளச்சேரி தொகுதிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது 1,26,657 – இணைக்கப்பட்டது 1,28,688. இலக்கு என்பது அந்தந்த தொகுதிகளின் வாக்காளர்களில் 40 சதவிகிதம் பேர் ஆகும்.

அந்த வகையில் இலக்கைத் தாண்டி, சென்னை தெற்கில் இருக்கிய 1880 வாக்குச் சாவடிகளிலும், BLA2, BDA, BLC என்று சொல்லப்படுகிற பாக முகவர்கள் அனைவரும் இணைந்து இந்த மகத்தான இலக்கை எட்டியிருக்கிறார்கள். ஆக தென்சென்னையில் மட்டுமே உறுப்பினர்களாக இணைந்திருப்பவர்களின் எண்ணிக்கை 8,96,665. இந்த எண்ணிக்கை என்பது 3,32,539 குடும்பங்கள் வாயிலாக தி.மு.கழகத்தில் இணைந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்கின்றோம்.

அந்த வகையில்தான் ஓரணியில் தமிழ்நாடு என்கிற திட்டத்தின் வெற்றியை வாக்குச்சாவடி அளவில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் பிறந்தநாளில் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உறுதிமொழி ஏற்கிற நாளாக நடத்தப்படவிருக்கிறது. இந்த உறுதிமொழி ஏற்கிற போது ஏற்கெனவே ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணைந்தவர்களையெல்லாம், இணைத்துக் கொண்டு இந்த உறுதிமொழி ஏற்கிற நிகழ்ச்சி நடத்தப்படவிருக்கிறது.

சென்னைத் தெற்கைப் பொறுத்தவரை 1880 வாக்குச்சாவடிகளிலும், அதாவது

11 பகுதிக் கழகங்கள், 2 ஒன்றியக் கழகங்கள் ஆகிய 13 அமைப்புகள் சார்பில் அதன் செயலாளர்கள், எத்தனை வாக்குச்சாவடிகள் இருக்கிறதோ, அவைகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படங்களை தலைமைக் கழகத்தின் சார்பில் அச்சிட்டு தரவிருக்கிறார்கள். அண்ணா அவர்களின் திருவுருவப்படங்களுக்கு காலை ஒரே நேரத்திற்குள் 1880 இடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தி, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் உறுதிமொழி ஏற்கப்படவிருக்கிறது.

மிகச் சிறப்பான வகையில் ஏற்கெனவே மாவட்டக்கூட்டம் நடத்தி ஒவ்வொரு பாகங்களிலும், BLA2, BDA, BLC, BLO போன்றவர்களை, ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தில் இணைந்திருப்போரையும் இணைத்துக்கொண்டு, இந்த நிகழ்ச்சி நாளை நடைபெற இருக்கிறது.

அடுத்த நிகழ்வாக செப்.17 அன்று முப்பெரும்விழா – திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் முப்பெரும்விழா என்று தொடர்ந்து பல்லாண்டு காலமாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இந்த இயக்கம் தோன்றிய நாள், பேரறிஞர் அண்ணா பிறந்த நாள், தந்தை பெரியார் பிறந்தநாள் ஆகிய மூன்று விழாக்களையும் ஒரு சேர்ந்து நடத்திக்கொண்டிருக்கிற முப்பெரும் விழா செப்.17ஆம் தேதி, கரூரில் நடத்தப்படவிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் அவ்விழாவில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் மிகச்சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு விருதுகள், தி.மு.க. மூத்த முன்னோடிகளை தொடர்ந்து சிறப்பிக்கிற வகையில் விருதுகள் மற்றும் பொற்கிழிகள் போன்றவை வழங்கி சிறப்புரையாற்ற விருக்கிறார்கள். அத்தோடு செப்.20, 21 தேதிகளில் தமிழ்நாடு முழுவதும் தலைமைக்கழகத்தின் சார்பில் சிறப்பு சொற்பொழிவாளர்கள் அறிவிக்கப்பட்டு பிரமாண்டமான பொதுக்கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது. இந்த பொதுக்கூட்டங்களை பொறுத்தவரையில், அந்தந்த மாவட்டக் கழகங்களின் சார்பில் ஒவ்வொரு கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்கிற வகையில் கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தக் கூட்டத்தில் தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டிருக்கிற பேச்சாளர்களின் பட்டியலை தர விருக்கிறார்கள். அந்த வகையில் மூன்றாவது கட்டமாக செப்.20, செப்.21 ஆகிய தேதிகளில் அந்தக் கூட்டங்கள் நடத்தப்படவிருக்கிறது. இப்படி, இந்த மாதம் 15ஆம் தேதியிலும், 17ஆம் தேதியிலும் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு திட்டத்தின் தொடர்ச்சி, பல்வேறு நிகழ்ச்சிகளாக நடத்தப்படவிருக்கிறது.

**வாக்காளர் பட்டியல் மோசடிகள்!**

செப்.17 பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி 1880 வாக்குச்சாவடிகளிலும், ஓரணியில் தமிழ்நாடு உறுதிமொழி ஏற்கிற நிகழ்ச்சி தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்கிற தலைப்பில் முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கிற உறுதிமொழி, ஒரு கோடி குடும்பத்தினரை யும் இணைக்கும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் ”நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதாச்சாரத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன்; தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன் என உறுதியேற்கவும்;

வாக்காளர் பட்டியல் மோசடிகள் மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்கு உரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன் என்றும்; நீட் மற்றும் எந்த ஒரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன் என்றும், மாணவர்களுக்கான உரிய கல்வி நிதியைப் பெற போராடுவேன் என்றும், தமிழ்மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்து போராடும் இயக்கம் தி.மு.க. என்கிற வகையிலேயும்;

பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தினரின் அரணையும் பாதுகாக்கும் இயக்கம் தி.மு.க. என்றும், 1 கோடி குடும்பங்களின் வாயிலாக உறுதிமொழி எடுக்கப்பட இருக்கிறது. சென்னை தெற்கை பொறுத்தவரை 3,32,539 குடும்பங்களின் 8,96,665 பேரும் பங்கேற்கிற வகையில் ஓரணியில் தமிழ்நாடு திட்டம் நடத்தப்படவிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில்

# பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனர் திருநாள் விழா!

### திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு பங்கேற்பு!

*சென்னை, செப்.16-*

*சென்னை தரமணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைத் தோற்றுவிப்பதற்கு முழுமுதற் காரணமாக விளங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் (செப்டம்பர் 15) உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நிறுவனர் திருநாளாக நேற்று (15.9.2025) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முற்பகல் 11.00 மணிக்கு முதல் நிகழ்வாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் ஆர். பாலகிருஷ்ணன், (பணி நிறைவு) அவர்கள் தலைமையில் முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் அனைவரும் நிறுவன வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் வணக்கம் செய்தனர்.*

இதன்பிறகு தொடங்கப்பெற்ற நிறுவனர் திருநாள் நிகழ்வில் நிறுவன உதவிப் பேராசிரியர் முனைவர் து. ஜானகி அவர்கள் வரவேற்புரையாற்றிட, நிறுவன இயக்குநர் (கூ.பொ.) கோபிநாத் ஸ்டாலின் அவர்கள் நோக்கவுரையாற்றினார்

நிறுவன இணைப் பேராசிரியர் முனைவர் பெ.செல்வக்குமார் மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் மணிகோ. பன்னீர்செல்வம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிறுவனத் தலைவர் ஆர் பாலகிருஷ்ணன் (பணி நிறைவு) அவர்கள் தலைமையுரையாற்றினார்.

திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் தொடர்ந்து “அண்ணாவின் அரசியல்” அணுகுமுறைகள் எனும் பொருண்மையில் பேருரையாற்றினார்.

அவ்வுரையில், பேரறிஞர் அண்ணா அவர்களை, இன்றைய இளம் தலைமுறையினர் தெரிந்து கொள்ள வேண்டும் எனவும், துண்டு துண்டாக சில நிகழ்வுகளைப் பேசுவது அண்ணாப் அவர்களை புரிந்து கொண்டதாக ஆகாது என்றார். மேலும், அண்ணா அவர்களின் அரசியல் அணுகுமுறை தொண்டர்களின் வாழ்க்கையோடு தொடர்புடையது என்றும், இயக்கத் தோழர்களின் குடும்பச் சிக்கல்களைக் கூட அண்ணா அவர்கள் தீர்த்து வைத்தார்கள் என்பதையும் உணர்வுப் பூர்வமாக எடுத்துரைத்தார். என்றென்றும் தந்தை பெரியார் அவர்களையே, அண்ணா அவர்கள் தம் தலைவராகப் போற்றினார். அண்ணா அவர்களின் அரசியல் அணுகுமுறையே தமிழ்நாடு வளப்பட மூலகாரணமாக இன்றும் தொடர்கிறது என்றும் திருநாவுக்கரசு எடுத்துரைத்தார்.

இறுதியாக நிறுவன உதவிப் பேராசிரியர் முனைவர் கா.காமராஜ் நன்றி நவின்றார்.

நிறுவன முதுகலைத் தமிழ் மாணவி செல்வி மு. கார்த்திகா இணைப்புரை வழங்கினார்.

இவ்விழாவில் தமிழ் ஆர்வலர்கள், நிறுவன பேராசிரியர்கள், நிறுவன மாணவர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102–வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



வத்தலக்குண்டு பேரூர்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



கஸ்பா பகுதி,
வேலூர் மாவட்டம்.



நெமிலி பேரூர்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



ஊஞ்சலூர் பேரூர்,
ஈரோடு தெற்கு மாவட்டம்.



பெரணமல்லூர் கிழக்கு ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம்,
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.